**ஆசிரியர் பயிற்சி பட்டயச்சான்று (Diplomo in Teacher Training ) – மேல்நிலைக் கல்விக்கு (+2) இணையாகக் கருதுதல் – அரசாணை**

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – இணைக்கல்வி தகுதி நிர்ணயம் – பத்தாம் வகுப்பு (SSLC) தேர்ச்சி பெற்ற பின்னர் இரண்டு ஆண்டு ஆசிரியர் பயிற்சி பட்டயச்சான்று (Diplomo in Teacher Training ) – மேல்நிலைக் கல்விக்கு(+2) இணையாகக் கருதுதல் – ஆணை வெளியிடப்பட்டது – திருத்தம் வெளியிடப்பட்டது.

பள்ளிக்கல்வி (பக3 (1)த் துறை

**அரசாணை (நிலை) எண்.68** **நாள்.25.03.2015**

படிக்கப்பட்டவை:

1.அரசாணை (நிலை) எண்.165, பள்ளிக்கல்வி பக3(1)த்துறை, நாள்.15.10.2014.

2.பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 120600/சி5/இ1/2011 நாள்.03.11.2014 மற்றும் 19.01.2015.

3.தொடக்கக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.31586/இ1/2014 நாள்.16.12.2014

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பத்தாம் வகுப்பு (SSLC) தேர்ச்சி பெற்ற பின்னர் இரண்டாண்டு ஆசிரியர் பயிற்சிப் பட்டயச் சான்று (Diplomo in Teacher Training ) பெற்ற கல்வித் தகுதியினை மேல்நிலைக் கல்விக்கு (+2) இணையாகக் கருதி பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் தீர்பாணைகள் பெறப்பட்டுள்ள நிலையில், பத்தாம் வகுப்பு (SSLC) தேர்ச்சி பெற்ற பின்னர் ஜீலை 1987–க்கு முன்பாகப் பெறப்பட்ட இரண்டாண்டு ஆசிரியர் பயிற்சிப் பட்டயச்சான்றினை (Diplomo in Teacher Training) மேல்நிலைக் கல்விக்கு (+2) இணையாகக் கருதி ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டு மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் அரசாணை (நிலை) எண். 906, கல்வித் (ஜி1) துறை நாள்.16.06.1987– ன் படி 1987–88–ம் ஆண்டு முதல் இடைநிலை ஆசிரியர் பயிற்சிக்கு (D.T.Ed) குறைந்தபட்ச கல்வித் தகுதி +2 என நிர்ணயிக்கப்பட்டது என்றும், அதற்கு முன்னர் 1986 – 1987–ம் ஆண்டு வரையில் பத்தாம் வகுப்பு (SSLC) தேர்ச்சி பெற்றவர்கள் இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் படிப்பில் (D.T.Ed.,) சேர்ந்து பயில அனுமதிக்கப்பட்டு வந்துள்ளனர் என்றும், இறுதியாக 1986–1987ம் ஆண்டில் இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் படிப்பில் முதல் ஆண்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் ஒரு சில பாடங்களில் தோல்வி அடைந்த மாணவர்கள், 1988ம் ஆண்டிற்குப் பின்னரே தோல்வியுற்ற பாடங்களில் தேர்வெழுதி தேர்ச்சி பெறுவார்கள் என்றும் அதுபோலவே 1986–87–ம் ஆண்டுக்கு முந்தைய கல்வி ஆண்டுகளில் இடைநிலை ஆசிரியர் பயிற்சியில் சேர்ந்து பயின்று தேர்வுகளில் தோல்வியுற்ற மாணவர்களும் பின்னர் வந்த ஆண்டுகளில் தோல்வியுற்ற பாடங்களில் தேர்வு எழுதித் தேர்ச்சி அடைந்திருக்க வாய்ப்புள்ள நிலையில், இத்தகையோர் பெற்றுள்ள இடைநிலை ஆசிரியர் பயிற்சி சான்றுகளையும் +2 தேர்ச்சிக்கு இணையாகக் கருதப்பட வேண்டிய நிலை உள்ளது என்று

பள்ளிக்கல்வி/தொடக்கக்கல்வி இயக்குநர்கள் தெரிவித்துள்ளனர்.

3. ஆனால் அரசாணை (நிலை)எண்.165, பள்ளிக்கல்வி பக3(1) துறை, நாள் 15.10.2014–ல் "ஜூலை 1987க்கு முன்பாக பெறப்பட்ட" என்று குறிப்பிட்டதால், இவர்கள் பட்டதாரி ஆசிரியராகப் பதவி உயர்வு பெற இயலாமல் பாதிக்கப்படுகிறார்கள். இவ்வாறு பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தங்களைப் பதவி உயர்வுக்குப் பரிசீலிக்கக் கோரி நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்குகளில் 2 ஆண்டு இடைநிலை ஆசிரியர் பட்டயப் பயிற்சி சான்றினை +2க்கு இணையானதாகக் கருதிட மனுதாரர்களுக்கு சாதகமாக தீர்ப்பாணைகள் வழங்கப்பட்டுள்ளது என்றும் எனவே மேற்காண் அரசாணையில் பத்தாம் வகுப்பு (SSLC) தேர்ச்சி பெற்ற பின்னர் ஜூலை 1987க்கு முன்பாக பெறப்பட்ட இரண்டு ஆண்டு ஆசிரியர் பயிற்சி பட்டயச் சான்றினை (Diplomo in Teacher Training) மேல்நிலைக் கல்விக்கு (+2) இணையாக எனத் திருத்தம் வெளியிடப்பட்டால், அதனால் அனைத்து தகுதியுடைய ஆசிரியர்களும் உரிய பயன் பெறுவர் என்று பள்ளிக்கல்வி இயக்குநர்/தொடக்கக்கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளனர்.

4. பள்ளிக்கல்வி/தொடக்கக்கல்வி இயக்குநர்களின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலனை செய்து, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைக்கு பின்வருமாறு திருத்தம் வெளியிடப்படுகிறது.

**திருத்தம்**

அரசாணை (நிலை) எண். 165, பள்ளிக்கல்வி பக3(1) துறை நாள். 15.10.2014 பத்தி 5–ல் குறிப்பிடப்பட்டுள்ள பத்தாம் வகுப்பு (SSLC)தேர்ச்சி பெற்ற பின்னர் ஜீலை 1987க்கு முன்பாக பெறப்பட்ட இரண்டு ஆண்டு ஆசிரியர் பயிற்சி பட்டயச் சான்றினை (Diplomo in Teacher Training ) மேல்நிலைக் கல்விக்கு (+2) இணையாக கருதி ஆணை வெளியிடலாம் என்பதற்குப் பதிலாக பின்வருவனவற்றை சேர்த்து படிக்கவும்.

"பத்தாம் வகுப்பு (SSLC) தேர்ச்சி பெற்ற பின்னர் 1986–1987 வரை (Last Batch) ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் சேர்ந்து பயின்று, அப்பயிற்சியினை இரண்டு ஆண்டுகளில் நிறைவு செய்தவர்கள் மற்றும் அப்பயிற்சியில் சில பாடங்களில் தோல்வியுற்று பின்னர் தேர்ச்சி பெற்றவர்கள் ஆகியோர் பெற்ற இரண்டு ஆண்டு ஆசிரியர் பயிற்சி பட்டயச் சான்றினை (Diplomo in Teacher Training ) மேல்நிலைக்கல்விக்கு (+2) இணையாக கருதி ஆணை வெளியிடலாம்".

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்.